**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**MCOP. 57 /2024**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் நாள் வியாழன் கிழமை
எ.ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. த.பாரதி, பலகை எழுத்தர் நிலை–2 அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ரீட்டா | க/பெ. : | தம்பிதுரை |
| கிராமம்: | பள்ளாங்கோயில் | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், திருத்துறைப்பூண்டி |
| வயது: | 49 | முகவரி: | பள்ளாங்கோயில் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 16.04.2026

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 08.11.2023 அன்று நடந்த விபத்து தொடர்பாக எடையூர் காவல் நிலைய குற்ற எண். 333/2023–ல் விபத்தை ஏற்படுத்திய வாகனமான பல்சர் TN 50 BV 0343 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை ஓட்டுவதற்கு விபத்தை ஏற்படுத்திய ஸ்டீமன் அவர்களிடம் இருந்து தங்களது வாகன ஆய்வின் போது தாக்கல் செய்த TN 50 Y 20230001256 என்ற ஓட்டுநர் உரிமம் செல்லதக்கதா என்றால் பல்சர் வாகனத்தை ஓட்ட இயலாது. மேற்படி ஓட்டுநருக்கு கியர் உள்ள இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு உரிமம் இல்லை. கியர் இல்லாத இருசக்கர

வாகனத்தை மட்டுமே ஓட்ட முடியும். மேற்படி அவர்களுக்கு அபதாரம் ஏதும் விதிக்கப்பட்டதா என்றால் எங்கள் அலுவலகத்தில் விதிக்கப்படவில்லை. மேற்படி பல்சர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு செல்லதக்க ஓட்டுநர் உரிமம் இல்லை.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்துள்ளார்.

**மறுவிசாரணை:– இல்லை**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.